**அனைவரும் தவறாமல் வாக்களிப்பது குறித்து விளையாட்டு வீரர், வீராங்கனைகளின் விழிப்புணர்வு ஓட்டம் நடைபெற்றது.**

இந்திய தேர்தல் ஆணையம் வரும் **நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 2019** முன்னிட்டு தேர்தலில் 100 சதவீதம் மக்கள் வாக்களிக்க வேண்டுமென வலியுறுத்தி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்த உத்தரவிட்டுள்ளது. இந்த உத்தரவிற்கிணங்க அரியலூர் மாவட்டம், அரியலூர் மாவட்ட விளையாட்டு அரங்கில் 100 சதவீதம் வாக்களிப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் உறுதி மொழி ஏற்றுக்கொண்டனர். பின்னர், விளையாட்டு மாவட்ட விளையாட்டு அரங்கிலிருந்து செந்துறை ரோடு முக்கிய வழியாக பேருந்துநிலையம் வரை வீரர், வீராங்கனைகளின் விழிப்புணர்வு ஓட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் நா.சத்தியநாராயணன், மாவட்ட வழங்கல் அலுவலர் இரவிசந்திரன், மாவட்ட இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அலுவலர் ஜெயகுமார் ராஜா, வட்டாட்சியர் கதிரவன் மற்றும் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.